**MINUTES OF THE PUBLIC HEARING MEETING OF M/S. SRI RAJALAKSHMI SAMAPPA BUILDING MATERIALS COMPANY ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F. NO. 1118/1, BILICHI VILLAGE, COIMBATORE NORTH TALUK, COIMBATORE DISTRICT IN AN AREA OF 3.00.36 HECTARE HELD ON 21.08.2024 AT 03.00 P.M. IN RAJ MAHAL, 4/283, METTUPALAYAM ROAD, MATHAMPALAYAM, BILICHI VILLAGE, COIMBATORE NORTH TALUK, COIMBATORE DISTRICT.**

| | | |
|---|---|---|
| **NAME OF THE PROJECT** | - | M/s. Sri Rajalakshmi Samappa Building Materials Company Rough Stone and Gravel Quarry,<br>S.F. No. 1118/1,<br>Bilichi Village, Coimbatore North Taluk,<br>Coimbatore District. |
| **VENUE** | - | Raj Mahal, 4/283,<br>Mettupalayam Road, Mathampalayam,<br>Bilichi Village, Coimbatore North Taluk,<br>Coimbatore District. |
| **DATE & TIME** | - | 21.08.2024 – 03.00 P.M. |

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Tmt. S. Rajeswari | District Revenue Officer,Stamps,<br>Coimbatore District. |
| 2. | Dr. R. Chandrasekaran | District Environmental Engineer (FAC),<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore North |
| 3. | Er.I. Abubakkar | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore North |
| 4. | Er. K. Kalaivendhan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, |

| | | |
|---|---|---|
| | | Coimbatore North |
| 5. | Thiru. K. Murugesan | Sub-Inspector,<br>Periyanaickenpalayam Police Station,<br>Coimbatore District |
| 6. | Thiru. Gnanasekaran | The Project Proponent |
| 7. | Thiru. Sheik Nawas | EIA Consultant,<br>Geo Exploration and Mining Solution,<br>Salem District. |
| 8. | Public | 84 Nos. (Enclosed in Annexure - II) |

**District Environmental Engineer:-**

- Good Morning to one and all present here. We are here to conduct public hearing meeting for the proposed rough stone and gravel quarry project by M/s. Sri Rajalakshmi Samappa Building Materials Company Rough Stone and Gravel Quarry
- As per the EIA Notification issued by MOEF, GOI dt: 14.09.2006, public hearings are required to be conducted for certain industries or projects. Accordingly, a public hearing meeting is being held today in Bilichi village, Coimbatore North Taluk, regarding the establishment of the proposed rough stone and gravel quarry project.
- I request the District Revenue Officer to preside over this public hearing meeting.
- I am proud to extend a warm welcome to the Public, Social Welfare Activists & Environmentalists who have gathered here for the public hearing meeting of M/s. Sri Rajalakshmi Samappa Building Materials Company Rough Stone and Gravel Quarry project on behalf of the Tamil Nadu Pollution Control Board.
- Public notice regarding public hearing meeting was published on 17.07.2024 in "Dinathanthi" and "Deccan Chronicle" newspapers. Pamphlets regarding the venue of the public hearing meeting were also distributed to the public. Notice Boards have been erected in the villages to create awareness to the public.

- ❖ First, the project consultant will provide an overview of the project. Following that, the public will have the opportunity to register their comments.
- ❖ These comments will be recorded and sent in both video and audio form to the State Environmental Impact Assessment Authority.
- ❖ Therefore, I request all the public to register their views.
- ❖ Now, the project consultant will explain the project in brief.

The District Environmental Engineer invited the public to express their views and suggestions on the project.

**1. Tmt. Janaki, Onnipalayam**

Hello everyone, My name is Janaki. The Project Proponent plays a crucial role in encouraging our children to study. He always helps the public. He encourages the public at all time.

The road was previously in poor condition, but it has now been repaired by him. Similarly, the school, which was once badly damaged, has been fully restored by the project proponent. He puts efforts to support the children continue their studies and also provides uniforms and shoes for them. Thank you again.

**2. Tmt. Lakshmi, Onnipalayam**

"During our school days, we were quite poor. I belong to Onnipalayam with less basic facilities. However, now the project proponent encourages the children by providing uniforms and remitted school fees. Thank you."

**3. Thiru. Karuppayi, Onnipalayam**

"We were born and raised in Onnipalayam itself. We've received significant support from the project proponent. They've been instrumental in helping us to build homes by supplying necessary materials like sand etc. Thank you"

**4. Thiru. Prabhakaran, Onnipalayam**

Hello everyone. I am from Onnippalayam village, and my agricultural land is situated 500 meters from the project proponent's stone quarry, which has been

operating on the village's outskirts for the past four years. When the quarry began its operations, it brought some challenges to those living nearby. We have formally submitted a request to the project proponent to address these issues.

The noise and vibrations from the detonations at the quarry were significantly higher than usual. Our entire panchayat have submitted a request to address this issue. The project proponent promptly responded and used Government-approved nonel electric detonators (ED) to minimize the disturbances caused.

Secondly, a quarry inevitably causes air pollution in the area. We made a second request for better control of the dust to mitigate this issue. In response, the company planted over ten thousand saplings across 100 acres and engaged workers separately to maintain them. Because of these efforts, the dust emanation is generally reduced.

Thirdly, quarries typically operate during day and night, but we requested the project proponent to restrict its operation only to daytime. The proponent agreed and ensured that quarry will not operate beyond six o'clock in the evening. They have followed that assurance till date. We want to express our gratitude on behalf of our panchayat for this.

Government school in Onnippalayam was in a very poor condition, with a building over 50 years old. That was not being properly maintained. We submitted a request for repairs, and within a month, the proponent improved the school infrastructure, repaired the water tank and toilets. We thank the project proponent for the support given by him.

As a result of the stone quarry operations, construction materials are available at low cost. The quarry operations led to a significant increase in the number of houses being built in the Panchayat, in turn increased the panchayat's income.

Considering these positive outcomes, I kindly request to issue license with instruction to operate within Government rules and without any hindrance to public.

**5. Thiru. Balamurugan, Onnipalayam**

I extend my heartfelt gratitude to the parents, mothers, the District Revenue Officer, the District Environmental Engineer, Mr. Gnanasekaran, Mr. Bhupathi, the owner of M/s. Venkateswara Crusher, and the people of Onnippalayam.

I was a former Panchayat union secretary. We have gathered here for a public hearing on August 21, 2024. My observation is that the, the project proponent makes efforts for the benefit of the panchayat that even the Government and its officers have not achieved.

Secondly, the proponent elevated the Government school to the level of a private institution. Without prejudice, financial assistance and uniforms are being provided to all 10th and 12th-standard students, as well as to first-generation graduates and college going students. Mr. Gnanasekaran, the proponent has helped a lot to public like Karmaveer Kamaraj, by constructing a compound wall, painting the school, providing new toilets, providing a playground, and financially assisted the children by providing uniforms, shoes, and other improvements.

As I belong to a low caste, I cannot able to read. Thanks to his efforts, not only to my own children, but to all the children in our area are being benefitted from his support. We have never seen an airplane, but he had sent them through flight. I am living near the quarry. They are planting numerous trees around the quarry to mitigate air pollution.

Secondly, in our Panchayat, lot of land is converted into house sites. Employment opportunities are scarce. The quarry has created jobs for over a hundred people, including drivers, and has significantly improved livelihoods. I am repeatedly requesting, with great urgency, to grant permission for this quarry. I am submitting a petition with supporting photos and evidence to support our request. I request you to grant permission to the quarry Thank you for your attention.

**6. Thiru. Marappan, Onnipalayam**

There is no issue in the operation of this quarry; it is operating smoothly. Approximately 50 people have gained employment opportunities. No problem has been faced by the people from quarry operations. Thank you.

7. **Tmt. Amsaveni, Onnipalayam**

Hello, dear general public, We reside in Onnipalayam and have no negative impacts. In fact, it provides significant support for educating our children, by providing school and college fees and school uniforms. Additionally, free construction materials are offered for building houses. This assistance has been invaluable to us. Thank you very much.

8. **Tmt. Easwari, Onnipalayam**

They provided us with employment and supply necessary support to build our homes. Everything has been taken care by them efficiently. Thank you.

9. **Tmt. Rukmani, Onnipalayam**

We live in Onnipalayam, where our school was in a dilapidated condition. I only attended school until the third standard and never went further, No one paid any attention to the school's critical condition. People would come, and canvass vote, and then forget about the school.

However, after bringing this to the proponent's attention, the school was thoroughly renovated, including painting and other necessary repairs. Thanks to the proponent's support, we have not faced any harm from its operations. There has been no negative impact regarding the quarry. Thank you.

10. **Thiru. Kumaresan, Onnipalayam**

I am the chairman of the nearby Bilichi panchayat. Currently, two quarries are operating within our panchayat. I am pleased to report that last year, the Bilichi panchayat earned one crore rupees revenue. Of this amount, 75 lakh rupees were allocated to the panchayat, and 25 lakh rupees were designated as the discretionary fund of the District Collector.

There is no problem with this quarry. Around 50,000 fruit bearing trees and shadow giving trees have been planted around this quarry. There are 50 families living in Onnipalayam to take care of the trees. Those 50 families and the 50 families working in the stone quarry, making a total of 100 families, and the lorry drivers of

the quarry, has been provided free food in the canteen located in the quarry premises.

I would like to inform that M-Sand is being produced and delivered free of cost to the neighboring panchayats, including Vellamadai, Bellathi, and Sikkarampalayam. For our Belladhi panchayat, 113 houses have been selected through *'Kalaignar Kanavu Illam Thittam'*, and each of these homes receives one unit of M-Sand at a reduced cost of Rs 1,000, with free door delivery.

If permission is granted for the M/s. Sri Rajalakshmi Samappa Building Material Company to establish a third quarry, it would significantly increase the panchayat's revenue. This additional income will be used to improve facilities in the Bilichi panchayat, including roads, lighting, drinking water, and drainage.

This panchayat is progressing only with the income generated by Stone quarry. About 75 lakh revenue has been received from the quarry last year.

I would like to inform that these quarries are providing protected drinking water to the workers through the panchayat. Therefore, I would like to inform you that permission may be given to M/s. Sri Rajalakshmi Samappa Building Material Company.

**11. Thiru. Murugan, Onnipalayam**

This quarry is situated on the outskirts of the panchayat and has caused no damages. A wire fencing has been provided. There are no issues. Farmers have not experienced any problems. I am currently building a house and it requires M-Sand, gravel, and other materials for construction. Therefore, I humbly request permission to continue operations at this quarry.

**12. Thiru. Murugan, Bilichi Panchayat, Rangarajapuram**

They are providing substantial support to our temple. He offers free M-Sand without transport cost. We value the proponent's contribution and strongly believe that having a quarry here continues to be beneficial for our panchayat.

Poja

13. **Thiru. Dinesh, Bilichi Panchayat, 6th Ward Councilor**

This quarry has generated significant income for the panchayat, contributing approximately 75 lakhs through mining activities. We have experienced no issues with the quarry. Thank you.

14. **Thiru. Jeganathan, Sikkarampalayam Panchayat**

The operation of this quarry provides direct employment to 100 people and indirect employment to nearly 100 people. Considering these benefits, I request that permission be granted for the continued operation of this quarry.

**District Environmental Engineer:**

Thank you everyone. Thank you all for your participation. Petitions submitted by the public will be forwarded to the State Level Environment Impact Assessment Authority along with the meeting proceedings.

On behalf of the District Administration and the Pollution Control Board, I would like to extend our gratitude to the environmentalists and the general public for sharing their views during this public consultation. I thank the District Revenue Officer for conducting the meeting peacefully, the police department, all participating officers, journalists, and Pollution Control Board officials.

Thank you once again.

**Annexure:-**

No of Petitions received : 31.

**District Environmental Engineer (FAC),**
**Tamilnadu Pollution Control Board,**
**Coimbatore North**

4/9-24

**District Revenue Officer/**
**Stamps,**
**Coimbatore District**

21.08.2024 அன்று மாலை 03.00 மணி அளவில், கோயம்புத்தூர் மாவட்டம், கோவை வடக்கு வட்டம், பிளிச்சி கிராமத்தில் அமைந்துள்ள ராஜ் மஹாலில் கோயம்புத்தூர் மாவட்டம், கோவை வடக்கு வட்டம், பிளிச்சி கிராமம், க.ச. எண். 1118/1 – ல் 3.00.36 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். ஸ்ரீ ராஜலட்சுமி சாமப்பா பிள்டிங் மெட்டீரியல்ஸ் கம்பெனி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி சுரங்க திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்:–

| | | |
|---|---|---|
| திட்டத்தின் பெயர் | : | தி/ள். ஸ்ரீ ராஜலட்சுமி சாமப்பா பிள்டிங் மெட்டீரியல்ஸ் கம்பெனி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி,<br>க.ச.எண்.1118/1,<br>பிளிச்சி கிராமம்,<br>கோவை வடக்கு வட்டம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| நிகழ்விடம்: | : | ராஜ் மஹால்,<br>4/283,<br>மேட்டுப்பாளையம் சாலை,<br>மத்தம்பாளையம்,<br>பிளிச்சி கிராமம்,<br>கோவை வடக்கு வட்டம்,<br>கோவை மாவட்டம் |
| நாள் &நேரம் | : | 21.08.2024 – மாலை 03.00 மணி |

பங்கேற்றோர் :

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. S. ராஜேஸ்வரி, | மாவட்ட வருவாய் அலுவலர் (கூ/பொ),<br>முத்திரைகள்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | முனைவர்.திரு. இரா. சந்திரசேகரன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (மு.கூ/பொ),<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் வடக்கு. |
| 3 | திரு. I. அபுபக்கர், | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோவை வடக்கு அலுவலகம் |
| 4 | திரு. K. கலைவேந்தன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோவை வடக்கு அலுவலகம் |
| 5 | திரு.K. முருகேசன், | துணை கண்காணிப்பாளர்,<br>பெரியநாயக்கன்பாளையம் காவல் நிலையம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |

| | | |
|---|---|---|
| 6 | திரு. சா. ஞானசேகரன் | திட்ட உரிமையாளர் |
| 7 | திரு.ஷேக் நவாஸ் | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்லொரேஷன் & மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம் மாவட்டம். |
| 8 | பொது மக்கள் | 84 (இணைப்பு II–ல் உள்ளபடி) |

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:–</u>

- அனைவருக்கும் வணக்கம். தி/ள். ஸ்ரீ ராஜலட்சுமி சாமப்பா பிள்டிங் மெட்டீரியல்ஸ் கம்பெனி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்காக பொதுமக்களுடைய கருத்து கேட்பு கூட்டம் நடைபெற உள்ளது.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினுடைய 14/09/2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு சுற்றறிக்கையின் படி குறிப்பிட்ட தொழிற்சாலைகள் அல்லது திட்டங்களுக்கு, பொது மக்களுடைய கருத்து கேட்புக் கூட்டம் இன்றியமையாது என்று சொல்லப்பட்டுள்ளது.
- அதன்படி, இந்த சாதாரண கல் குவாரி திட்டத்திற்கு, பொது மக்களிடையே கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதால், ஸ்ரீ ராஜலட்சுமி சாமப்பா பிள்டிங் மெட்டீரியல்ஸ் கம்பெனி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைவதற்கு, பொது மக்களுடைய கருத்துக் கேட்புக் கூட்டம் சிக்காரம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் தாலுக்காவில் இன்று நடைபெறுகிறது.
- இந்த பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தித் தருமாறு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.
- இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்ய உள்ள பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அனைவரையும் வருக வருக என்று வரவேற்கிறேன்.
- இந்த கருத்து கேட்புக் கூட்டம் நடக்கவுள்ளது சம்மந்தமாக 17.07.2024 அன்று 'தி டெக்கன் கிரானிகல்' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளிதழ்களில் விளம்பரம்

கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், பொது மக்களை சந்தித்து அவர்களுக்கு துண்டு பிரசுரம் மற்றும் கிராமங்களில் விளம்பர பதாகைகள் நிறுவி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ முதலில் திட்ட அலுவலர் அவர்கள், இந்த திட்டத்தை பற்றி உங்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். அதன் பின் பொதுமக்கள் அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம்.
- ❖ இந்த கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வீடியோ மற்றும் ஆடியோ வடிவிலும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும்.
- ❖ எனவே, பொதுமக்கள் அனைவரும் அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- ❖ முதலில் திட்ட ஆலோசகர் அவர்கள் இந்த திட்டத்தை பற்றி சுருக்கமாக விளக்குவார்கள்.

## தி/ள். ஜியோ எக்ஸ்புளோரேசன் அண்டு மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம்

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை தயாரித்த நிறுவனம் சார்பில், திரு.ஷேக், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்லொரேஷன் & மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம் மாவட்டம் அவர்கள் நிழல்படம் மூலம், செயலாக்கப்படவுள்ள இத்திட்டத்தின் சுற்றுச் சூழல் தாக்கங்கள், அவற்றைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மற்றும் இத்திட்டத்தின் மூலம் பெறப்படவுள்ள நன்மைகள் குறித்து

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>**

"தற்பொழுது, பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம்.

**<u>பொதுமக்களின் கருத்துகள்:-</u>**

**<u>1. திருமதி. ஜானகி, ஒன்னிப்பாளையம்</u>**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் ஜானகி. எங்கள் குழந்தைகளை படிக்க வைக்கிறார். நன்றாக உதவி செய்கிறார். தைரியமாக இரு, எதற்கு

கவலைப்படுகிறாய்? இந்த ஊரிலே இருந்து விடுங்கள். நானே உதவி செய்கிறேன் என்று கூறுவார்.

முன்பெல்லாம் சாலைகள் மிகவும் மோசமாக இருந்தது. இப்போதுதான் அதை சரி செய்து கொடுத்தனர். பள்ளியும் மிகவும் சிதிலம் அடைந்திருந்தது. அதையெல்லாம் சரி செய்து தந்தனர். குழந்தைகளுக்கு உதவி செய்கிறார்கள். குழந்தைகளுக்கு சீருடைகள் மற்றும் காலனிகள் வாங்கி கொடுக்கிறார்கள். நன்றி வணக்கம்.

**<u>2. திருமதி. லட்சுமி, ஒன்னிப்பாளையம்</u>**

பள்ளி படித்த காலத்தில் எல்லாம் நாங்கள் ஏழை மக்கள். வசதி வாய்ப்பில்லை. ஆனால், இவர்கள் பள்ளி குழந்தைகளுக்கு சீருடை வாங்கி கொடுக்கிறார்கள். பள்ளி கல்விக் கட்டணம் செலுத்த உதவி செய்திருக்கிறார்கள். நன்றி.

3. **<u>திரு. கருப்பாயி, ஒன்னிப்பாளையம்</u>**

நாங்கள் பிறந்து வளர்ந்தது எல்லாமே ஒன்னிப்பாளையத்தில்தான். இவர்கள் நிறைய உதவிகள் செய்கிறார்கள். வீடு கட்ட மணல் அளித்து நிறைய உதவி செய்கிறார்கள். நன்றி வணக்கம்.

4. **<u>திரு பிரபாகரன், ஒன்னிப்பாளையம்</u>**

எல்லோருக்கும் வணக்கம். என்னுடைய பூர்வீகம் ஒன்னிப்பாளையம் கிராமம் தான். கல்குவாரிக்கு 500 மீட்டர் எதிர்ப்புறமாக என்னுடைய விவசாய பூமி அமைந்திருக்கிறது. இந்த கல்குவாரியானது நான்கு ஆண்டுகளாக கிராமத்தின் ஒதுக்குப்புறமாக இயங்கி வருகிறது. இந்த கல்குவாரி ஆரம்பித்த காலத்தில், அதாவது, எந்த ஒரு தொழில் அமைத்தாலுமே அருகில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு சில பிரச்சினைகள் கண்டிப்பாக வரும். அதே போன்று இந்த குவாரி ஆரம்பித்த காலத்தில் எங்களது மக்களுக்கு பிரச்சினை வந்தது. அதனை நாங்கள் அந்நிறுவனத்தாரிடம் ஒரு கோரிக்கையாக வைத்துதோம்.

அது என்னவென்றால், வெடி வைக்கும் பொழுது நார்மல் வெடி வைப்பதனால் சத்தமும் அதிர்வும் மிக அதிகமாக உள்ளது என்று. மக்கள் அனைவரும் சேர்ந்து ஒரு கோரிக்கையாக அவர்முன் வைத்தோம். உடனடியாக அந்த கோரிக்கையை ஏற்று அரசாங்கத்தில் அனுமதிக்கப்பட்ட நாணல் ED என்கின்ற எலக்ட்ரிக் டிடொனேட்டர் பயன்படுத்தி வெடிக்கச்செய்வதால் எங்களுக்கு சத்தம் மற்றும் அதிர்வு மிகவும் குறைவாக தான் உள்ளது.

இரண்டாவதாக, குவாரி என்றாலே அந்த இடத்தில் மாசு இருப்பதாகத்தான் அர்த்தம். அந்த மாசினை கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லி இரண்டாவது கோரிக்கையாக வைத்திருந்தோம். அதற்கு அவர் என்ன செய்தார் என்றால், 100 ஏக்கர் சுற்றிலும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு அதற்கென்று ஆட்களை நியமித்து, இன்று வரை அதை பராமரித்து வருகிறார்கள். அதனால், காற்று அடிக்கின்ற காலத்தில் தூசியினால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவது என்பது மிகவும் குறைவாகத்தால் உள்ளது.

மூன்றாவதாக எல்லா கல்குவாரிகளும் இரவு பகலாக இயங்கிக் கொண்டே இருக்கும். ஆனால், நாங்கள் அதையும் ஒரு கோரிக்கையாக வைத்திருந்தோம். அதனை அவர்கள் ஏற்று பகல் நேரங்களிலும் மட்டும் குவாரிகள் இயங்கும். ஆறு மணிக்கு மேல் எந்த குவாரியும் இயங்காது என்று உத்தரவாதம் கொடுத்தார்கள். அந்த உத்தரவாதத்தை இன்று வரை அவர் கடைபிடித்துக் கொண்டிருக்கிறார்.

அதனால் எங்கள் மக்கள் சார்பாக நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் கடந்த ஒரு ஆண்டிற்கு முன்பு ஒன்னிப்பாளையத்தில், அரசு பள்ளி மிகவும் பழுதடைந்து இருந்தது. அது 50 வருடத்திற்கு மேலாக இருந்த ஒரு பள்ளி கட்டிடம். அதை யாரும் சரியாக பராமரிக்கவில்லை. அதையே ஒரு கோரிக்கையாக நாங்கள் அவரிடம் எடுத்துக் கூறினோம். ஒரே மாதத்தில் உடனடியாக அந்த பள்ளியில் பலகைகள் மாற்றி, அசுத்தமாக இருந்த குடிநீர் தொட்டி மற்றும் கழிப்பறை போன்றவற்றை தனியாக ஆட்களை அமைத்து உடனடியாக சரி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

ஆகையினால், கல்குவாரி இயங்கிவருவதனால் எங்கள் பகுதியில் ஏழை எளிய மக்கள் யாராவது வீடு கட்டினால் கட்டுமான பொருட்கள் உடனடியாக கிடைக்கிறது. அதேபோன்று கட்டுமான பொருட்கள் நல்ல தரத்துடனும், இலவசமாகவும் கிடைப்பதால் பஞ்சாயத்தில் ஏகப்பட்ட வீடுகள் இப்போது உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதனால், பஞ்சாயத்திற்கு நல்ல வருமானம் வந்து கொண்டிருக்கிறது. ஆகையினால், இத்திட்டத்தை பரிசீலனை செய்து விதிகளுக்கு உட்பட்டு பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் கல்குவாரிகளை செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5. **<u>திரு. பாலமுருகன், ஒன்னிப்பாளையம்</u>**

அன்பார்ந்த பெற்றோர்களுக்கும், தாய்மார்களுக்கும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், ஞானசேகரன் அய்யா அவர்களுக்கும், பூபதி ஐயா அவர்களுக்கும், வெங்கடேஸ்வரா கிரஷர் ஐயா அவர்களுக்கும், நான் சார்ந்திருக்கும் ஒன்னிப்பாளையம் கிராம மக்களுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முன்னாள் ஒன்றிய செயலாளர். இங்கே பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் 21.08.2024 அன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எங்கள் கருத்து என்னவென்றால் அரசு மற்றும் அரசு பணியாளர்கள் கூட செய்ய முடியாத பணிகளை மக்களுக்காக இவர்கள் செய்கிறார்கள்.

இரண்டாவதாக, அரசு பள்ளியை தனியார் பள்ளி அளவிற்கு ஊக்குவித்து எங்கள் பள்ளியை சீரும் சிறப்போடும் இயங்க வைத்தார். குழந்தைகளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு, பாரபட்சம் இல்லாமல், பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள், பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள், மேலும் தேர்ச்சி பெற்று முதல் தலைமுறை கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் அனைவருக்கும் நிதி உதவி செய்தும் சீருடைகள் கொடுத்து உதவுகின்றனர். அது போக, பிளிச்சி ஊராட்சிக்கு உட்பட்ட ஒன்னிப்பாளையம் பகுதியில் 75 ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட அந்த பள்ளியிலே சுற்றுச்சுவர் எழுப்பி, வண்ணம் பூசி, கழிப்பிட

வசதி செய்து, கொடுத்து விளையாட்டு மைதானம் அமைத்து, மாணவர்களுக்கு சீருடைகள் மற்றும் காலணிகள் போன்றவற்றை வழங்கி கர்மவீரர் காமராஜர் போல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் தான் ஞானசேகர் ஐயா அவர்கள்.

நான் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்தவன் தான். என்னால் படிக்க முடியவில்லை. என் குழந்தைகள் நன்றாக படிக்கிறார்கள் என்றால், என் குழந்தைகள் மட்டுமல்ல இங்குள்ள அனைத்து குழந்தைகளும் நன்றாக படிக்கிறார்கள் என்றால் அவர்தான் காரணம். நாங்கள் எல்லோரும் விமானத்தை பார்த்ததே இல்லை ஆனால், அவர்கள் விமானத்தில் அழைத்துச் சென்றார்கள். அவர்களுககு கல்விதான் முக்கியம் என்று கூறி, அவர்களது எதிர்காலத்தை தீர்மானித்துக் கொண்டு சிறப்பாக செயல்படுகிறார். கல்குவாரி இருக்கும் பகுதியில் தான் நான் வசித்துக் கொண்டிருக்கிறேன். குவாரியின் சுற்றுப்புறத்தில் நிறைய மரங்கள் வைத்து வளர்த்து வருகிறார் இதனால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை.

இரண்டாவதாக இன்றைக்கு திரும்பிய பக்கம் எல்லாமே ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மனைகளாக பிரித்து கொண்டிருக்கிறார்கள் வேலை வாய்ப்புகள் இல்லை விவசாயமுமில்லை ஆனால் நூற்றுக்கும் மேற்பட்ட மக்களுக்கு இந்த வேலை வாய்ப்பு கொடுக்கிறார். ஓட்டுநர்களுக்கு வாழ்வாதாரம் இங்கு பெருகி கொண்டிருக்கின்றது. நான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புகைப்படங்கள் மற்றும் ஆதாரங்களை இணைத்து மனுவாக கொடுக்கிறேன். எங்களுக்கு கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று வேண்டுகோளாக கேட்டுக்கொள்கிறேன் நன்றி வணக்கம்.

6. **திரு. மாரப்பன், ஒன்னிப்பாளையம்**

வணக்கம். இந்த கல்குவாரியினால் எவ்வித இடையூறும் இல்லை. நல்லவிதமாக தான் இயங்கி வருகின்றது. கல்குவாரி இருப்பதினால், சுமார் 50 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றது. எந்த இடையூறும் இல்லை. வணக்கம்.

7. **திருமதி. அம்சவேணி, ஒன்னிப்பாளையம்**

அன்பார்ந்த பொது மக்களுக்கு வணக்கம். நாங்கள் ஒன்னிப்பாளையத்தில் தான் குடியிருக்கின்றோம். எங்களுக்கு கல்குவாரியினால் எந்த வித பாதிப்பும் இல்லை. குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கு நிறைய உதவி செய்கிறார்கள். பள்ளி கட்டணம், கல்லூரி கட்டணம், சீருடை போன்றவற்றை கொடுக்கிறார். எந்த பிரச்சினையும் இல்லை. வீடு கட்டுவதற்கான மூலப்பொருட்களை இலவசமாக கொடுக்கிறார். நல்ல உதவிகளை செய்கிறார். மிக்க நன்றி.

8. **திருமதி ஈஸ்வரி, ஒன்னிப்பாளையம்**

எல்லோருக்கும் வணக்கம். எங்களுக்கு வேலை கொடுத்தார்கள். வீடு கட்டுவதற்கு எல்லா உதவிகளையும் செய்தார்கள். அவர்கள் நன்றாக இருக்க வேண்டும். நன்றி.

9. **திருமதி ருக்மணி, ஒன்னிப்பாளையம்**

மாலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் ஒன்னிப்பாளையத்தில் வசித்து வருகிறோம். எங்கள் பள்ளி இடிந்து விழுகிற அளவிற்கு இருக்கும். நான் மூன்றாம் வகுப்பு வரை தான் பள்ளிக்குச் சென்றேன். அதற்கு மேல் செல்லவில்லை. யாரும் இந்த பள்ளியை திரும்பி பார்க்கவே இல்லை. எல்லோரும் வருவார்கள் ஓட்டு கேட்பார்கள். ஆனால், இந்த பள்ளியை திரும்பி கூட பார்க்க மாட்டார்கள்.

ஆனால், இதை அவரிடம் கூறியதுமே, எல்லா விதத்திலும் உதவி செய்து வண்ணம் பூசி சிறப்பாக சரிசெய்து தந்திருக்கிறார். இந்த கல்குவாரி இருப்பதினால், எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. எந்த ஒரு இடையூறும் இல்லை. நன்றி வணக்கம்.

10. **திரு. குமரேசன், ஒன்னிப்பாளையம்**

நான் அருகாமையில் இருக்கின்ற பெள்ளாதி ஊராட்சி மன்ற தலைவர். ஏற்கனவே, இந்த பிளிச்சி ஊராட்சியில் இரண்டு கல்குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த பிளிச்சி ஊராட்சிக்கு மட்டும் சென்ற ஆண்டு ஒரு கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதில் ஊராட்சிக்காக 75 லட்சம் ரூபாயும், மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதியாக 25 லட்சம் ரூபாயும் சென்றிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கல்குவாரியினால் எந்தவித பிரச்சினையும் இல்லை. இந்த கல்குவாரியை சுற்றி பலன் தரும் மரங்களும், நிழல் தரும் மரங்கள் போன்று கிட்டதட்ட 50,000 மரங்கள் நடப்பட்டுள்ளது. மரங்களை பராமரிப்பதற்காகவே அந்த ஒன்னிப்பாளையத்தை சேர்ந்த 50 குடும்பங்கள் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். அந்த 50 குடும்பங்களும் போக அந்த கல்குவாரியில் வேலை செய்கின்ற 50 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 100 குடும்பங்களுக்கும், சென்று வருகின்ற லாரி ஓட்டுனர்களுக்கும் போன்ற அனைவருக்கும் மூன்று வேளையும் அங்கேயே கேண்டீன் அமைத்து இந்நிறுவனத்தாரால் உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

அருகில் இருக்கின்ற வெள்ளமடை ஊராட்சி, பெள்ளாதி ஊராட்சி, சிக்காரம்பாளையம் ஊராட்சி போன்ற ஊராட்சிகளுக்கெல்லாம் இங்கேயே எம்-சாண்ட் தயார் செய்து, இலவசமாக டெலிவரி செய்து கொண்டிருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நமது பெள்ளாதி ஊராட்சிக்கு மட்டும் கலைஞர் கனவு இல்லம் மூலம் 113 தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த 113 வீடுகளுக்கும் ஒரு யூனிட் எம்-சாண்ட்-ஐ ஆயிரம் ரூபாய் விலை குறைவாகவும் இலவசமாக டோர் டெலிவரையும் செய்து கொண்டிருக்கிறார். அதனால் மூன்றாவது கல்குவாரிக்கு இந்த ஸ்ரீ ராஜலட்சுமி சாமப்பா பில்டிங் மெட்டீரியல் கம்பெனியின் மூன்றாவது கல்குவாரிக்கு அனுமதி வழங்கினால் மறுபடியும் ஊராட்சிக்கு அதிகமான வருவாய் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வருவாயை வைத்து இந்த பிளிச்சி ஊராட்சியிலேயே சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வசதி, வடிகால் வசதி, போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொண்டிருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒன்னிப்பாளையத்தில் இருக்கின்ற வார்டு உறுப்பினரும், ஊராட்சி மன்ற தலைவரும், இங்கே இருக்கின்ற கல்குவாரி தொழிலாளர்களுக்கும், கல்குவாரியினால் ஈட்டப்படுகின்ற வருமானத்தை வைத்து தான் இந்த ஊராட்சி முன்னேறி இருக்கின்றது. சுமார் 75 லட்சம் வருவாய் சென்ற ஆண்டு வந்திருக்கிறது என்று கூறப்பட்டிருக்கின்றது.

தொழிலாளர்களுக்கு இந்த கல்குவாரி உரிமையாளர்கள், ஊராட்சி மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதனால், இந்த ராஜலட்சுமி சாமப்பா பிள்டிங் மெட்டீரியல் கம்பெனி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

11. **திரு. முருகன், ஒன்னிப்பாளையம்**

இந்த கல்குவாரியானது, ஊருக்கு ஒதுக்குப்புறமாக தான் இருக்கின்றது. எந்த ஒரு பாதிப்பும் இல்லை. சுற்றியும் கம்பி வேலி போட்டு இருக்கிறார்கள். எந்த ஒரு பாதிப்பும் இல்லை. விவசாயிகளுக்கு எந்தவொரு பிரச்சனையும் இல்லை. நான் வீடு கட்டியிருக்கிறேன். வீடு கட்டும்போது எம் சான்ட் ஜல்லி போன்றவற்றை வாங்குவதற்கு இது அருகாமையில் இருக்கின்றது. எனவே, கல்குவாரிக்கு அனுமதி தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

12. **திரு. முருகன், பிளிச்சி பஞ்சாயத்து, ரங்கராஜபுரம்**

எங்களது கோவிலுக்கு எல்லா உதவிகளும் செய்கிறார்கள். இந்த சிக்காரம்பாளையம் பஞ்சாயத்து தலைவரான கல்குவாரி உரிமையாளர் கோவிலுக்கு நல்ல உதவிகளை செய்கிறார். எம்-சண்டையும் இலவசமாகவே கொடுக்கிறார். இந்த தலைவர் இங்கே இருக்க வேண்டும். எங்களுக்கு குவாரி வேண்டும்.

13. **திரு தினேஷ், பிளிச்சி ஊராட்சி, ஆறாவது வார்டு கவுன்சிலர்**

நான் பிளிச்சி ஆறாவது வார்டு கவுன்சிலர். இந்தக் குவாரியினால் பஞ்சாயத்திற்கு வருமானம் வந்திருக்கின்றது. சுரங்கத்தின் மூலமாக சுமார் 75 லட்சம் வந்திருக்கின்றது. குவாரியினால் எங்களுக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை. நன்றி.

**14.திரு ஜெகநாதன், சிக்காரம் பாளையம் ஊராட்சி.**

இந்த குவாரி இயங்குவதனால் 100 பேருக்கு நேரடியாகவும், 100 பேருக்கு மறைமுகமாகவும் வேலை கிடைக்கின்றது, ஆகவே, இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம். எந்தவித பாதிப்பும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

அனைவருக்கும் நன்றி. மனு கொடுப்பவர்கள் யாராக இருந்தாலும், இப்போது கொடுக்கலாம். கூட்ட நடவடிக்கைகளுடன் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் தங்கள் கருத்துக்களை பதிவு செய்த, சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும், பொது மக்களுக்கும் மற்றும் இந்த கூட்டத்தை சிறப்பாக நடத்த உதவிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், காவல் துறை நண்பர்களுக்கும், கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும் மாசு கட்டுப்பட்டு வாரியம் சார்பிலும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம் !

இணைப்பு :

மனுக்களின் எண்ணிக்கை – 31.

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் (மு.கூ/பொ)
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
கோயமுத்தூர் வடக்கு

மாவட்ட வருவாய் அலுவலர்,
முத்திரைகள்
கோயமுத்தூர்

4/9/24